

கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 20வது வார்டு அமமுக செயலாளர் ஏழுமலை, பாட்டாளி மக்கள் கட்சி இளைஞர் அணி மாநகர செயலாளர் ஹரிகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் 60 பேர் மற்றும் விளந்தகண்டம் அ.தி.மு.க. ஊராட்சி செயலாளர் தமீம்அன்சாரி, விளந்தகண்டம் அ.தி.மு.க. கிளைச்செயலாளர் சேக்அலாவுதீன், சோழபுரம் பேரூராட்சி 11வது அ.தி.மு.க. செயலாளர் முகமது சபீர், ஆகியோர் தலைமையில் 11 பேர் என மொத்தம் 71 பேர் அந்தக்கட்சியில் இருந்து விலகி, தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை தி.மு.கவில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது மாநகர செயலாளர் சு.ப. தமிழழகன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், பகுதி செயலாளர் இரா.கல்யாணசுந்தரம், மண்டல குழு தலைவர் மனோகரன், தி.மு.க. மாநகர சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் தங்கராஜ், சோழபுரம் பேரூராட்சி செயலாளர் ஜபரூதீன், பேரூராட்சி துணை செயலாளர் செல்வமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதி மயிலம் ஒன்றியம் தீவனூர், மைலத்தில் நடைபெற்றதிமுக ஊராட்சி செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சிறப்புரை ஆற்றினார். அப்போது மயிலம் வடக்கு ஒன்றியம் கொள்ளார் ஊராட்சியைச் சேர்ந்த அதிமுக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும்பாஜக, த.வெ.க.ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் மைலம் தொகுதி தேர்தல் பார்வையாளர் கடலூர் இள.புகழேந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா,மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் ஒன்றிய செயலாளர்கள் ராஜாராமன், மணிமாறன், செழியன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### முதல்வரின் சாதனைகள், திட்டங்களை எண்ணி - மயிலத்தில்

# பல்வேறு கட்சியினர் நூற்றுக்கு மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

மயிலம் , மார்ச் 28 -

தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்துள்ளதிட்டங்களையும் சாதனைகளையும் எண்ணி இன்றைக்கு அ.தி.மு.க. , பா.ஜ.க., தவெக உள்ளிட்ட கட்சிகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்து வருவதாக தீவனூரில் நடைபெற்ற ஊராட்சி செயலாளர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பெருமிதம் தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி மைலம் தெற்கு, வடக்கு மத்தியம் ஒன்றியம் மற்றும் ஒலக்கூர் மேற்கு ஒன்றியதிமுக சார்பில் கிளை கழக செயலாளர்கள்,வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் தீவனூர் மற்றும் மைலத்தில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர்கள் சேது நாதன், மணிமாறன், செழியன், ராஜாராமன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பல் ல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் மயிலம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுகின்ற கழக வேட்பாளரை சுமார் 30,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். இதற்கு தி.மு.க. நிர்வாகிகள் அனைவரும் ஒற்றுமையுடன்களப்பணியாற்ற வேண்டும். மயிலம் சட்டமன்ற தொகுதியில் தொகுதியில் முதலமைச்சர் போட்டியிடுகிறார் என்ற எண்ணத்துடன்கழக நிர்வாகிகள் அனைவரும் முதலமைச்சரின் திட்டங்களையும் சாதனைகளையும் ஒவ்வொரு வீடாக சென்று மக்களிடம் எடுத்து கூறி வாக்குகள் பெற வேண்டும் 80வயதுக்கு மேற்பட்ட வயதானவர்கள் மாற்றுத்திறனாளிகள் அவர்களுடைய இல்லத்தில்இருந்து வாக்களிப்பதற்கு இந்திய தேர்தல் ஆணையம் வழி வகை செய்துள்ளது.

தற்போது தேர்தல் ஆணையம் சார்பில்வயதானவர்கள் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் வாக்களிப்பதற்கு ஒப்புதல் படிவம் 2. வழங்கப்பட்டு வருகிறது. கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் படிவம் 2 முறையாக அவர்களுக்கு சென்றுள்ளதா என கண்டறிந்து அவர்களுக்கு படிவம் சென்று சேரும் வகையில் மேற்பார்வையிட்டு உதவி செய்ய வேண்டும்.

ஒன்றிய பா.ஜ.க. மோடியுடன் கூட்டணி வைத்துள்ள அ.தி.மு.க. எடப்பாடிக்கு ஓட்டு போடக் கூடாது என மக்கள் முடிவு செய்துள்ளனர். முதலமைச்சரின் நிர்வாகத் திறமையாலும் அவரது சொல் செயல் திட்டங்களால் தி.மு.க.விற்கு ஓட்டு போட அ.தி.மு.க. தொண்டர்கள் தயாராக உள்ளதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கூட்டத்தில் மயிலம் வடக்கு ஒன்றியம் கொள்ளார் ஊராட்சி முன்னாள் அதிமுக ஊராட்சி மன்ற தலைவர் பாலன்,பிஜேபி நிர்வாகி தெய்வமணி, த.வெ.க.வினோத்ஆகியோரது தலைமையில் அக்கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சால்வை அணிவித்து வரவேற்று நடைபெறுகின்ற தேர்தலில் அனைவரும் கடுமையாக உழைத்து முதலமைச்சரின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் மயிலம் தொகுதி தேர்தல் பார்வையாளர் கடலூர் இள.புகழேந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய அவைத் தலைவர்கள் மைலம் சுப்பிரமணி, சேகர்,

பரசுராமன், துணைச் செயலாளர்கள் இந்திரா சுரேஷ், செல்வகுமார், பாலசுந்தரம், சண்முகம், ஆனந்தன், சித்ரா ஏழுமலை, சங்கர், தமிழரசன், மாவட்ட பிரதிநிதிகள் சசிகுமார், விஜயன், கோபால கிருஷ்ணன், சேகர், சிவானந்தம், ஞானசேகர், வீடூர் பிரகாஷ்,பொருளாளர்கள் ஆறுமுகம், ஆனந்தன், பழனி, ஒலக்கூர் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் அமராவதி, துணை செயலாளர்கள் ஆர்.காளி, சுப்பிரமணியன், அன்பரசி ஜெயபிரகாஷ் , மாவட்டப் பிரதிநிதிகள் ஹரிகிருஷ்ணன், கே.காளி, மணி ஒன்றிய பொருளாளர் திரு ஞான சம்பந்தம் உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் ஊராட்சி கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை — 16 சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் மண்டல அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி!

## கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் அளித்தார்!

சென்னை, மார்ச் 28 -

கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ இணை ஆணையாளர் (கல்வி) திருமதி. க.கற்பகம், தலைமையில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பணிக்காக நியமிக்கப் பட்ட தேர்தல் மண்டல அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2026க்கான அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் வாக்குப்பதிவிற்காக சுமார் 4,079 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. வாக்குச்சாவ டிப் பணிக்காக சுமார் 19,594 வாக்குச்சாவடி அலுவலர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான முதற்கட்ட பயிற்சி, வரும் 28.03.2026 அன்று சென்னை மாவட்டத்திலுள்ள 16 மையங்களில் தேர்தல் மண்டல அலுவலர்கள் மூலமாக அளிக்கப்படவுள்ளது.

தேர்தல் பணிக்காக 415 தேர்தல் மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டு ள்ளனர் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது தொடர்பாக நேற்று முன்தினம் (26.03.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தேர்தல் மண்டல அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த புத்தாக்க பயிற்சியில் தேர்தல் நடைமுறை மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்தும், வாக்குப்பதிவிற்கு வாக்குச்சாவடிகளை சரியாக அமைப்பது குறித்தும், வாக்குச்சாவடிக்கு தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் வாக்கு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பது குறித்தும், வாக்கு இயந்திரங்களை சரியாக பயன்படுத்துவது குறித்தும், பல்வேறு படிவங்களை பூர்த்தி செய்வது குறித்தும், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிப்பது குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் வாக்குச்சாவடி அலுவலர்களின் பல்வேறு நிலைகள் மற்றும் அவர்களின் பொறுப்புகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டது.

பயிற்சி மையங்களில், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளின் விவரங்கள் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்), சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், துணை ஆட்சியர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

# தி.மு.க. கூட்டணிக்கு விடுதலைப் பறவைகள் கட்சி ஆதரவு!

சென்னை, மார்ச் 28 -

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு விடுதலைப் பறவைகள் கட்சி ஆதரவு தெரிவிப்பதோடு, தி.மு.க. கூட்டணிக்காக அயராது பாடுபடுவோம் என்றும், விடுதலை பறவைக் கட்சி நிறுவனத் தலைவர் டெல்லி ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

வேண்டும்! வேண்டும்! மீண்டும் மீண்டும்!

திராவிடமடல் பொற்கால ஆட்சி,

வருகிற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. தலைமையில் மதசார்பற்ற கூட்டணி கட்சிகள் மாபெரும் அமோக வெற்றி பெற்று 234/234 சரித்திர சாதனை பெற்றிடும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க. கூட்டணி கட்சிகள் வெற்றிக்காக விடுதலை பறவை கட்சி அயராது பாடுபடும்.

இவ்வாறு நிறுவனத் தலைவர் டெல்லி ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பா.ஜ.க. ஆளும் கோவாவில் அரங்கேறிய கொடூரம்!

# 30 சிறுமிகளை சீரழித்த பா.ஜ.க. கவுன்சிலர் மகன் கைது!

கோவா, மார்ச் 28 -

பா.ஜ.க. ஆளும் கோவா மாநிலத்தில் 30 சிறுமிகளை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி, மிரட்டிப் பணம் பறித்த வழக்கில் கோவா பா.ஜ.க. கவுன்சிலரின் மகன் கைது செய்யப்பட்டார்.

கோவா மாநில பா.ஜ.க. கவுன்சிலராக இருப்பவர் சுஷாந்த் நாயக். இவரது 22 வயது மகன் சோஹம் நாயக் கடந்த மூன்று ஆண்டுகளாக 30 சிறுமிகளை பாலியல்ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமிகளின் அந்தரங்க காட்சிகளை வீடியோவாக பதிவு செய்து தொடர்ந்து மிரட்டி பணமும் பறித்து வந்துள்ளார். மேலும் தனது நண்பர்களுடன் மது அருந்திய போது இந்த வீடியோக்களை காட்டியதாக கூறப்படு கிறது. இந்த சம்பவம் வெளியே தெரிய வந்ததும் கோவா முழுவதும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து சோஹம் நாயக்கை கைது செய்தனர். பாதிக்கப்பட்ட சிறுமிகள் அனைவரையும் அடையாளம் காணவும், அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யவும், விசாரணையின்போது கைப்பற்றப் பட்ட டிஜிட்டல் ஆதாரங்களை ஆய்வு செய்யவும் நடவடிக்கை எடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கோவா 30 சிறுமிகளை சீரழித்த பா.ஜ.க. கவுன்சிலர் மகன் கோவா மாநில பா.ஜ.க. கவுன்சிலராக இருப்பவர் சுஷாந்த் நாயக் பா.ஜ.க. கவுன்சிலரின் 22 வயது மகன் சோஹம் நாயக், கடந்த மூன்று ஆண்டுகளாக 30 சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார் பாதிக்கப்பட்ட சிறுமிகளின் அந்தரங்க காட்சிகளை வீடியோவாக பதிவு செய்து தொடர்ந்து மிரட்டி பணமும் பறித்து வந்துள்ளார்.

மேலும் தனது நண்பர்களுடன் மது அருந்திய போது இந்த வீடி யோக்களை காட்டியதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் வெளியே தெரிய வந்ததும் கோவா முழுவதும் பெரும் கொந்தளிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து பா.ஜ.க. கவுன்சிலரின் மகன் சோஹம் நாயக்கை கைது செய்தனர்.

### பறிமுதல் செய்த போதைப்பொருள் மாயமான விவகாரம்:

# 2,300 கி. போதைப்பொருளை எலிகள் சாப்பிட்டதாம்!

## குஜராத் போலீசார் விளக்கம்! சி.ஏ.ஜி. அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்!

அகமதாபாத், மார்ச் 28 -

குஜராத்தில், பறிமுதல் செய்யப்பட்ட 2 ஆயிரத்து 300 கிலோ போதைப்பொருளை எலிகள் சாப்பிட்டதாக காவல்துறை விளக்கமளித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சமீபகாலமாக நாட்டிலேயே போதைப்பொருளின் கடத்தல் மையமாக குஜராத் மாநிலம் உருவெடுத்துள்ளதாக பல்வேறு தரப்பினரிடம் இருந்து புகார்கள் எழுந்துள்ளன. வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் போதைப்பொருள், குஜராத்தில் உள்ள துறைமுகம் வழியாக மற்ற மாநிலங்களுக்கு கடத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டு நிலவு கிறது.

GFX in இந்த சூழலில், இந்திய தணிக்கை மற்றும் கணக்காய்வுத் தலைவர் வெளியிட்ட சமீபத்திய அறிக்கையில், குஜராத்தில், கடந்த 2010 முதல் 2022 காலகட்டத்தில், அம்மாநில போலீசார் 6 ஆயிரத்து 510 கிலோ போதைப் பொருளை பறிமுதல் செய்ததாகவும், அதில் 4 ஆயிரத்து 177 கிலோ போதைப் பொருளை அழித்ததாகவும் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், மீதமுள்ள 2 ஆயிரத்து 332 கிலோ மாயமானதாக எழுந்த புகாரை அடுத்து, போதைப்பொருள் திருடுபோனதாகவும், எலிகள் அவற்றை சாப்பிட்டு விட்டதாகவும் குஜராத் காவல் துறை விளக்கமளித்ததாக அறிக்கையில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சியில் முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியில் ஒன்றான தே.மு.தி.க. நிர்வாகிகள் சந்திப்பு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அ.வெ.அன்புமணிமாறன் தலைமையில் நடைபெற்றது, இதில் நடைபெறவிருக்கும் 2026 சட்டமன்ற பொது தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றி, அனைத்து ஊராட்சிகளிலும் மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியே அதிகப்படியான வாக்குகள் பெற்று 2026ல் மீண்டும் கழக தலைவர் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட சிறப்பாக கழக பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார், இந்நிகழ்வில் இந்திய தேசிய காங்கிரஸ், வி.சி.க., தே.மு.தி.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

### 800 கி.மீ தூரத்தை தாக்கும்

# புதிய வகை பிரமோஸ் ஏவுகணைகள்!

## இந்திய ராணுவம் வாங்கிட முடிவு!

டெல்லி, மார்ச் 28 -

பிரமோஸ் ஏவுகணையின் தாக்குதல் வரம்பை 450 கி.மீ.லிருந்து 800 கி.மீ. ஆக உயர்த்தி, புதிய ஏவுகணைகளை வாங்க இந்திய ராணுவம் திட்டமி ட்டுள்ளது. கடந்தாண்டு நடைபெற்ற இந்தியா பாகிஸ்தான் மோதலில் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகள் பெரிதும் உதவியதாக கூறப்படுகிறது. இந்திய பாதுகாப்புத் துறையில் முக்கிய முன்னேற்றமாக, 800 கிலோமீட்டருக்கும் அதிக தூரத்தை தாக்கும் திறன் கொண்ட பிரமோஸ் சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்த ஏவுகணைகள் அதிவேகமாக (சூப்பர்சோனிக்) பாய்ந்து, நீண்ட தூர இலக்குகளை துல்லியமாக தாக்கும் திறன் கொண்டவை. இந்தியாவிடம் சுமார் 450 கி.மீ. வரை தாக்கும் ஏவுகணைகள் இருந்தாலும், பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இந்த புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை மற்றும் உலகளாவிய பாதுகாப்பு சவால்களை கருத்தில் கொண்டு, எதிர்காலத் தேவைகளை முன்னிட்டு இந்தியா இந்த நடவடிக்கையை மேற்கொண் டுள்ளதாக தெரிகிறது. இந்த திட்டம் இந்திய ராணுவத்தின் தாக்குதல் திறனை மேலும் அதிகரிக்கும் என்றும், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.




தூத்துக்குடி வடக்கு மாவட்ட அ.தி.மு.க. வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் எஸ்.பி.பாபுசெல்வகுமார் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், ராதாகிருஷ்ணன், செல்வராஜ், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, தி.மு.க. வழக்கறிஞர் அணி நீதிமன்ற தலைவர் ஜான்சிராணி, கழக வழக்கறிஞர் அணி கனிராஜ், சிவராம சண்முகம், ஏஞ்சல், மாரீஸ்வரி விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.